REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5; சென்னை: ஆனி 14உ வெள்ளி (28—6—57) ★ ★ வெளியூர்: ஆனி 15உ சனி (29—6—57) [இதழ் 12

அன்னிய நாடுகளுக்கு பணம் அனுப்பத் தடை

நிதி மந்திரி அலுவலக உத்தரவு

புதுடில்லி, ஜூன் 27—

அன்னியச் செலாவணிச் சுருக்கத்தின் காரணமாக, அன்னிய நாடுகளுக்கு மணி ஆர்டர் மூலம் பணம் அனுப்பும் வசதி உடனடியாகத் நிறுத்தப்படும் என்று, நிதி மந்திரி அலுவலகம் அறிவித்திருக்கிறதாம்.

இதுவரை ஒவ்வொருவரும், நாள் ஒன்றுக்கு ரூபாய் செலாவணியுடைய நாடுகளுக்கு ரூ. 30-ம், ஸ்டர்லிங் செலாவணியுடைய நாடுகளுக்கு 2 பவுனும் அனுப்ப அனுமதிக்கப்பட்டிருந்தனர் என்றும் சர்க்கார் குறிப்பு கூறுகிறது.

கொள்ளைக்கு உடந்தையானால் காங்கிரஸ்!

எதிர்த்துக் குரல் கொடுத்தால் கழகம்!

டெல்லி வட்டாரங்களின் விசித்திரப் போக்கு

அண்ணா கண்டனம்

24—6—57-ல், சென்னை—சிந்தாதிரிப்பேட்டை முனுசாமி நினைவு மன்றத் துவக்க விழாவில், அண்ணா அவர்கள் ஆற்றிய பேருரையின் இருபகுதிகள் தொடர்ந்து வெளிவந்துள்ளது; இறுதி பகுதி இங்கு தரப்படுகிறது:—

"கையிலே களிமண் எடுத்துச் செல்வதானால், நாம் ஒன்றும் அதிகக் கவனமாக இருக்க வேண்டியதில்லை; எடுத்துச் செல்லும் மண்ணில் சிறிது கீழே சிந்திவிட்டாலும் நஷ்டமில்லை; ஆனால் விலையுயர்ந்த கண்ணாடிப் பாத்திரத்தை எடுத்துச் செல்வதானால் நாம் மிகுந்த கவனத்தோடு நடந்து சென்றாக வேண்டும்; ஏனெனில், கைதவறிவிட்டால் பாத்திரத்திற்குத்தான் சேதம் ஏற்படும்.

"அதுபோல, நாம் சாமானியர்களாயினும், 'திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்' என்ற மிகப் பெரிய காரியத்தில் ஈடுபட்டிருக்கிறோம். அதனால், தப்பித் தவறி நமக்கும் மற்ற கட்சிகளுக்கும் விரோதம் அதிகமாகி விட்டால், நாம் மேற்கொண்டிருக்கிற காரியம் கெட்டுவிடும். அதனால்தான், நம்மீது வெறுப்புக் காட்டுகிறவர்களிடம் கூட நாம் அன்பு காட்ட வேண்டும் எனவும் கூறுகிறேன்.

"நாம் இங்கே, 'திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்; என்று பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

"வடக்கே நாகர்கள், 'நாகநாடு வேண்டும்' எனப் போராடிக் போராடிக் கொண்டிருக்கிறார்கள்

"நாம் இப்படி, இங்கே ஒரு சுதந்திர நாட்டுக் கோரிக்கைக்காகப் பாடுபடுகிறோம் வேலை செய்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரியாது; நாக நாட்டார் தங்களின் கோரிக்கைக்காகச் செய்யும் காரியங்கள் நமக்கும் பூராவாகத் தெரியாது.

"நாம் நமது கோரிக்கையை அன்பின் வழி ஈடேற்றிக்கொள்ள நினைக்கிறோம்; நாகர்களோ, பலாத்கார வழியில் தங்களின் கோரிக்கையில் வெற்றி பெறப் போராடுகிறார்கள்.

"அன்பின் வழியில், சுதந்திரம் கோரும் நம்மிடம் இங்குள்ளவர்கள் வாதாடுகிறார்கள்.

"பலாத்கார வழியில் போராடும் நாகர்களை அடக்க, அங்கே இராணுவத்தை அனுப்பிவைத்திருக்கிறார்கள்.

"நாகர்களோடு எவரும் வாதாடிக் கொண்டிருக்கவில்லை, அவர்களது கோரிக்கை பற்றி! ஆனால், நம்மோடு மட்டும் வாதாடுகிறார்கள்!

"இதுமட்டுமல்ல; இன்று இந்தியாவில் உள்ள இதர மாகாணத்தவர் எல்லாம், நம்மைப்போல வேண்டுமானால் 'தனிநாடு வேண்டும்' என்று கேட்கவில்லையே தவிர, 'டில்லியில் எல்லா அதிகாரங்களும் குவிந்து கிடப்பது கூடாது' என்று கூறாதவர்கள் இல்லை எனலாம்.

"பாரதம், இமயம் முதல் குமரிவரை ஒரே நாடுதான் என்று நம்மிடம் வாதாடுகிறவர்கள், அசாம் மாநிலத்தில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்பதற்காக, பீகாரில் அமைப்பது என்ற டில்லியின் முடிவுக்கு எதிராக நடைபெறும் அமளிதுமளிகளைப் பார்க்கட்டும்; நமக்கும், தங்கள் நெஞ்சத்திற்கும் பதில் சொல்லட்டும்!

"அது மட்டுமல்ல; பீகாருக்குச் சொந்தமானது என்று பீகாரிகள் கருதும் சில பிரதேசங்களுக்காக, பீகாரிகளும் - வங்காளிகளும் சண்டையிட்டுக்கொள்ளும் காட்சியினை நாம் காண்கிறோம்.

"ஏன் இந்தச் சண்டை? 'பீகாரும், வங்கமும் இந்தியாவின் பாகங்கள்தானே! அவை எங்கிருந்தால் என்ன?—என்ற எண்ணம், பீகார், வங்க மாநிலத்தவருக்கு ஏன் வரவில்லை?

"பம்பாய் நகரத்திற்காக மராட்டியரும், குஜராத்தியரும் சண்டை போட்டுக் கொண்டிருக்கின்றனர்.

"இங்கிருந்து மாற்றலாகிச் சென்ற கவர்னர் ஸ்ரீபிரகாசா பம்பாயில் கவர்னராக இருக்கிறார். அவர் சிலநாட்களுக்குமுன் சட்டசபைக்கு உரையாற்றவந்தபோது, 'மராட்டிய பிரதிநிதிகள் அத்தனை பேரும் சபையிலிருந்து வெளியேறினர்; என்று செய்தி வெளிவருகிறது. பம்பாயை மராட்டியருக்குத்தர மறுத்து, குசராத்தியரையும் ஒன்றாக இணைத்துவாழச் செய்யும் கொடுமைக்கு எதிராக அவர்கள் சட்டசபையிலிருந்து வெளி நடப்பு செய்திருக்கிறார்கள்.

"ஆனால் இங்கு நாம் காட்டிய அரசியல் பெருந்தன்மையைப் பாருங்கள்.

"தேவிகுளம், பீர்மேடு பறிபோய்விட்டது; அதற்குக் காரணமானவர், கவர்னர் ஜான்! அவர் ஒரு மலையாளி! அவர் சட்டசபைக்கு வந்து உரையாற்றிய போது, நாம் பெருந்தன்மை காட்டினோம். ஆனால், நாம் காட்டிய பெருந்தன்மைக்குக் கிடைக்கிற பதிலோ, 'போனது போகட்டும்' என்ற சுப்பிரமணியத்தின் பேச்சுத்தான்!

"பம்பாயும், பீகாரும், அசாமும் தங்கள் உரிமைக்காகப் போரிடுகின்றன; ஆனால் இங்குள்ளவர்களோ, 'அது பற்றிப் பேசுவதே கூடாது என்கின்றனர்.

"இவர்கள்—இந்த மந்திரிகள் டில்லி சென்று, தமிழர் உரிமை பற்றிப் பேசினால், அங்குள்ளவர்கள், 'காங்கிரசா? கழகமா?' என்று கேட்கிறார்களாம்!

"டில்லி நடத்தும் கொள்ளைக்கு எதிராகக் குரல் எழுப்புபவர்கள் எல்லாம், கழகம்; அந்தக் கொள்ளைக்கு உடந்தையாகயிருப்பவர்கள்தான் காங்கிரஸ்—என்று கருதப்படுகிறதா, டில்லி வட்டாரங்களில்?

"இந்த நிலைமைகளை எல்லாம் நாடு நன்றாக அறிந்துகொண்டாக வேண்டும். நமது உரிமைக் கிளர்ச்சி மேலும் வலிவு பெற்றாக வேண்டும். அதில்தான் இந்த நாட்டு மக்களின் வாழ்வு அடங்கியிருக்கிறது."

புத்தரின் புனித போதனைபற்றிப் பேசுவோரின் இந்துமத வெறி!

மதம் மாறியதால் சமூக பொருளாதார அவக்கேடுகள் மறைந்து விடுமா?

சீக்கியருக்குத் தரப்படும் சலுகை பௌத்தருக்குக் கிடையாதென்பது நியாயமா?

அரசியல் சட்டத்தைச் சுட்டிக் காட்டி டாக்டர் கிருஷ்ணசாமி கண்டனம்

புதுடில்லி, ஜூன் 25—

"தாழ்த்கப்பட்ட வகுப்பினர் புத்த மதத்தைத் தழுவியதினாலேயே, அவர்களுக்குஇதுவரை தரப்பட்டுவந்த சலுகைகளுக்கான நியாயங்கள் வலுவிழந்து போய்விடவில்லை.

"மத சுதந்திரம் பற்றிய பிரிவில் அரசியல் சட்டம், 'சமூக நல அபிவிருத்தி, சீர்திருத்தம் போன்ற விவகாரங்களில் சீக்கிய - ஜைன - புத்த மதத்தைச் சார்ந்தவர்களையும் இந்துக்களைப் போலவே நடத்த வேண்டும்' என்று விதிக்கிறது. வேறு வார்த்தைகளால் கூறவேண்டுமானால், 'சாதியை அங்கீகரிக்காத சீக்கிய, ஜைன, புத்த மதக்காரர்களும் இந்து சமூகத்தில் ஒரு பிரிவினர் அனுபவிக்கும் சமூகக் கொடுமைகளை அனுபவிக்கிறார்கள் என்பதை அரசியல் சட்டம் ஒப்புக்கொண்டிருக்கிறது' என்றுதான் கூறவேண்டும்.

"கல்வி, மற்றும் அதுபோன்ற துறைகளில் விசேடச் சலுகைகள் பெறும் விஷயத்தில், சீக்கியரில் சில வகுப்பினர் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்பட்டு சலுகை அளிக்கப்பட்டு வருகின்றனர் என்பதிலிருந்தும் இதனை அறியலாம்.

"எனவே, தாழ்த்தப்பட்டவர்களில் எவரேனும் வேறு ஏதாவது மதத்தைத் தழுவினாலும்கூட, சீக்கிய மதத்தைத் தழுவிய பின்னும் சிலர் சமூகக் கேடுகளை அனுபவிப்பதாகக் கருதப்படுவது போலவே, வேறு மதத்தைப் பின்பற்றுகிறவர்களும், அத்தகு சமூகக் கொடுமைகளைத் தொடர்ந்து அனுபவிக்கிறார்கள் என்றே கருதவேண்டும் என்று வாதிட நிரம்ப இடம் இருக்கிறது.

"எனவே, நமது சமூகத்தின் பலவீனமான ஒரு பிரிவினரின் முன்னேற்றத்தில் தனக்குள்ள பொறுப்பினை மத்திய சர்க்கார் உள்நாட்டிலாகா தட்டிக் கழித்துவிட்டு, 'மதம் மாறியவுடனேயே தாழ்த்தப்பட்டவர்களின் சமூக-பொருளாதார அவக்கேடுகள் மறைந்துவிடுகின்றன' என்ற சட்ட விசாரணையில் ஈடுபடக்கூடாது. உள்நாட்டிலாகா, கொஞ்சம், கடந்த காலத்தைத் திரும்பிப் பார்ப்பது விவேகமானது."

என்று, டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி எம். பி. அவர்கள் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்

அதிர்ஷ்டம் இருந்தால் சேலத்தில் இரும்புத் தொழிற்சாலையாம்!

மந்திரி வெங்கட்ராமன் தரும் பதில்

சென்னை, ஜூன் 28—

"ஜாம்ஷெட்பூரிலுள்ள உலோகப் பொருள் ஆராய்ச்சி நிலையத்தில் சேலம் இரும்புக் கனி சோதிக்கப்பட்டுவருகிறது; இந்தக் கனியைக் கொண்டு தேனிரும்பு செய்ய முடியுமா என்பதற்கே ஆராய்ச்சி நடைபெறுகிறது.

"இதற்கிடையில் சேலம் கனியைக்கொண்டு தேனிம்பு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றினை சர்க்கார் துறையில் துவங்கும் திட்டமும் இருக்கிறது,"

என்று, தொழில் மந்திரி வெங்கட்ராமன் கேள்விக்குப் பதிலளிக்கும் போது, சட்டசபையில் நேற்று கூறியிருக்கிறார்.

தனியாருக்கும் அனுமதியாம்!

"தேனிரும்பு தயாரிக்க கோவை 'டெக்ஸ்டூல்' கம்பெனியாருக்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது; தினம் 50 டன்வரை உற்பத்தி செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறது; தினம் 35 டன் உற்பத்தி செய்துகொள்ள இராம கிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திற்கு அனுமதி வழங்குவது பற்றியும், பரிசீலிக்கப்பட்டுவருகிறது" என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

"நெய்வேலி பழுப்பு நிலக்கரியைக்கொண்டு, சேலம் இரும்பை உருக்க முடியுமா என்பது பற்றியும் ஜாம்ஷெட்பூரில் பரிசோதிக்கப்பட்டுவருகிறது" என்றும் மந்திரி கூறினார்.

"பரிசோதனை எப்போதுதான் முடியும்?" என்று கேட்கப்பட்ட போது, 'ஒருவரின் அதிருஷ்டத்தைப் பொறுத்ததே அது' என்று மந்திரி கூறினாராம்.

தோழர் ஏ. கோவிந்தசாமி (தி.மு.க.) 'அந்த அதிருஷ்டம் சென்னைக்கு உண்டா?' என்று கேட்டதற்கு, 'ஜோசியரைத்தான் கேட்க வேண்டும்' என்று மந்திரி பதில் கூறினாராம்!

★

தேர்தலுக்காக செலவிட்ட தொகை

ரூ. 38 இலட்சம் என்று தகவல்

இந்த ஆண்டு ஏப்ரல் திங்கள் வரை நடைபெற்ற சட்ட சபை, பாராளுமன்ற தேர்தல்களுக்காக சென்னை சர்க்கார் ரூ. 37,58,000 செலவிட்டுள்ளனர்; இன்னும் சில காரியங்களுக்காக, கொஞ்சம் பணம் செலவிட வேண்டிவரும்; இந்தச் செலவில் சரிப்பாதியை டெல்லி சர்க்கார் ஏற்றுக் கொள்ளும்; தேர்தல் வேலையில் ஈடுபட்ட ஊழியர்களுக்கான பிரயாணப் படியை உடனடியாகத் தந்து விடுமாறு மாவட்ட அதிகாரிகள் உத்திரவிடப்பட்டிருக்கிறார்கள்", என்று, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போது, நிதி மந்திரி சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

★

தமிழ்நாட்டிற்கு கோதாவரி நீர்

கோதாவரி நீரை தமிழகம் பயன்படுத்திக் கொள்வது பற்றி ஆந்திர மந்திரிகளுடன் அண்மையில் காமராசர் பேச்சுவார்த்தை நடத்தியதாக மந்திரி கக்கன் சட்ட சபையில் தெரிவித்திருக்கிறார்.

கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், 'ஆந்திரர்கள் நம்முடன் சமீப காலம்வரை இருந்தவர்கள் என்பதால், நமது கஷ்டங்கள் அவர்களுக்குத் தெரியும்; எனவே, அவர்கள் இந்த ஏற்பாட்டிற்கு ஒத்துக்கொள்ளக்கூடும்' என்று மந்திரி கூறினாராம்.

'திட்டம் உருவானால், சென்னை செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்கள் பலன் பெறும்' என்றும் மந்திரி விளக்கம் தந்திருக்கிறார்.

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 28—6—57 வெள்ளி

இது நியாயந்தானா?

2,500-ம் ஆண்டு புத்தர் பிறந்த விழாவை, சென்ற ஓராண்டுக் காலமாக இந்தியத் துணைக்கண்டம் முழுதும் பெரும் பெரும் விளம்பரத்துடன் கொண்டாடப்பட்டு வந்திருக்கின்றது. காங்கிரசு அமைச்சர்கள் முதல், மாநில கவர்னர்கள்வரை மேற்படி விழாக்களில் கலந்துகொண்டு, புத்தர் புனித போதனைகள் குறித்து சண்டப்பிரசண்டம் செய்துள்ளனர்.

புனித புத்தரைவிட, தாங்கள் புனிதமான பெரியவர்கள் என எவரும் நம்பும் வண்ணம், விழாக்களில் பங்குகொண்ட காங்கிரசு ஆளவந்தார்கள் அனைவரும் நடித்துக் காட்டியுள்ளனர். அவர்கள் நடத்தையினால் மீண்டும் புத்தர் நெறிக்கு இந்தியத் துணைக்கண்டத்தில் இடம் கிடைக்கக்கூடும் என நல்லறிவாளர்கள் நம்ப முன்வந்தனர்.

இந்தியத் துணைக்கண்டத்தில் நடைபெற்ற புத்தர் விழாவில் இந்தியப் பிரதமர் கலந்துகொண்டு, புத்தர் புனித போதனை குறித்து பலப்பல எடுத்து இயம்பினதுடன் திருப்தி கொண்டுவிடாது, அண்மையில் இலங்கைத் தீவில் நடைபெற்ற புத்தர் விழாவிலும் பங்குகொண்டு, புத்தர் போதனைகளுக்கு புத்துயிரூட்டி பூரித்தார். புத்த தர்மமே, உலக அமைதிக்கு ஏற்ற வழிகாட்டி என்றும்கூட, அவர் அங்கு விளக்கிக்காட்டி, செவியுற்ற மக்கள் மகிழ்வது கண்டு தாமும் மகிழ்ந்தார்.

இந்து மதத்தின் சாரமே புத்த தர்மம் என்று விளக்கம் தரப்பட்டது. இந்து தர்மத்தின் ஒரு கூறே புத்த நெறி என்று போதிக்கப்பட்டது.

ஆனால், அந்தோ! புத்தர் புனித கோட்பாடு குறித்து சென்ற ஓராண்டுக் காலமாகத் தங்களால் விளக்கிக் காட்டப்பட்டு வந்துள்ளதை, தாங்களே கடைப்பிடித்து ஒழுக மனமில்லாதவர்களாகக் காங்கிரசு ஆளவந்தார்கள் காட்சியளிக்கின்றனர். தாங்களால் சிறப்பித்துக் கூறப்பட்டுவந்த ஒன்றையே, பின்பற்றி செயலாற்ற விரும்பாதவர்களாகக் காங்கிரசு ஆளவந்தார்கள் இருப்பது வேதனை தரும் விசித்திரமாகும்.

இந்து மார்க்கத்திற்கும் புத்த மார்க்கத்திற்கும் துளியும் வேற்றுமை இல்லை என்று சாதித்து வந்தவர்கள், இன்று இந்தியத் துணைக்கண்டத்திலிருப்பவர்களில் புத்த மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் வேறானவர்கள் என்றும் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் வேறானவர்கள் என்றும்வேற்றுமைகாட்டமுன் வந்துள்ளனர். அதாவது, இதுவரை இந்துமதத்தைப்பின்பற்றி வந்த பழங்குடி மக்கள் (அரிசனம்) புத்த மார்க்கத்தைத் தழுவிக்கொள்ளும்பட்சத்தில், அவர்கள் அனைவரும் அரிசனம் என்ற நிலையிலிருந்து பெயர்ந்தவர்களாகிவிடுகின்றனர் என்றும், இந்து மதத்தில் இருந்துவரும் பழங்குடி மக்கள் பெற்றுவரும் அரசாங்கச் சலுகைகள் எதனையும் அவர்கள் பெறுவதற்கு உரிமை கிடையாது என்றும், இந்தியப் பேரரசின் சார்பில் பிரதமர் நேருவும், உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்துவும் கிட்டவட்டமாக அறிவித்துள்ளனர். அவ்வறிவிப்பிற்கு இந்தியப் பேரரசின் முத்திரையும் பொறிக்கப்பட்டுவிட்டிருக்கிறது. அக்கட்டளையைப் பின்பற்றி நடந்து கொள்ளும்படி மாநில அரசாங்கங்களுக்கும் இந்தியப் பேரரசு ஆணைபிறப்பித்து விட்டிருக்கின்றதாம்.

தங்கள் வேற்றுமை போக்கிற்கு, மக்கள் சபையில் காங்கிரசு ஆளவந்தார்களால் நிறைவேற்றப்பட்டுள்ள 1956-ம் ஆண்டு ஷெட்யூல் வகுப்பு திருத்தச் சட்டம் ஒன்றையும் ஆதாரமாகக் காட்டியுள்ளது இந்தியப் பேரரசு.

புத்த மார்க்கமும் இந்து மதத்தின் ஒரு கூறுதான் என ஒப்புக்கொண்ட பிறகு, புத்த மார்க்கத்தைத் தழுவிக்கொண்டனர் என்ற காரணத்திற்காக ஷெட்யூல் வகுப்பினரை இந்து மதத்தைச் சார்ந்துள்ள ஷெட்யூல் வகுப்பினரிலும் வேறானவர்கள் எனப் பேசுவது பொருந்தாது. அவ்வாதத்தில் கடுகளவு நியாயமும் இருக்க முடியாது.

ஷெட்யூல் வகுப்பைச் சேர்ந்தவர்கள் மதம் மாறிவிட்ட காரணத்தினாலேயே, அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உடனடியாக உயர்ந்து விடுவது ஒரு போதும் இல்லை. அனுபவம் இவ்வுண்மையைத்தான் போதிக்கின்றது.

இந்து மதத்திலிருந்து வேறு மதத்திற்குச் சென்றுவிட்ட காரணத்தினாலேயே ஷெட்யூல் வகுப்பினரைவிட்டு வறுமை விலகிச் சென்றுவிடுவது கிடையாது. என்றும் போல் அவர்கள் இல்லாமையிலும், சமூகக் கொடுமையிலும் அல்லல்பட வேண்டியவர்களாகத்தான் இருந்து வருகின்றனர். இதுவும் அனுபவ உண்மையாகும்.

எனவே, ஷெட்யூல் வகுப்பினர் புத்தமார்க்கத்தைத் தழுவிக்கொண்டனர் என்பதற்காக, மற்ற ஷெட்யூல் வகுப்பினர்களுக்கு அளித்துவரும் சலுகைகளை அவர்களுக்கு அளிக்க இந்தியப்பேரரசு மறுப்பதுவன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும். தங்கள் பழிவாங்கும் குணத்திற்கு, தங்களால் வேண்டுமென்றே இயற்றப்பட்ட ஒரு திருத்தச் சட்டத்தைச் சான்றாகக் காட்டுவதும் கேலிக்கூத்தாகும்.

சமுதாய நலத்திற்கும், சீர்திருத்தத்திற்கும் ஏற்பாடு செய்வதற்கான சட்டம் இயற்றுவது பற்றி, அரசியல் சட்டத்தின் 25-வது பிரிவு விளக்கம் தருகிறது. அப்பிரிவில், சீக்கியர், ஜெயினர், புத்த மார்க்கத்தைச் சேர்ந்தவர் ஆகிய மூவரும் இந்துக்கள் என்றே கொள்ளப் படுவர் எனத் தெரிவிக்கின்றது.

மேற்படி அரசியல் சட்ட பிரிவை எடுத்துக்காட்டி, புத்த மார்க்கத்தைத் தழுவியுள்ள ஷெட்யூல் வகுப்பினருக்கு அரசாங்க சலுகை அளிப்பது குறித்து புதிதாகப் பிறப்பித்துள்ள கட்டளையை, திரும்பப் பெற்றுக்கொள்ள இந்தியப் பேரரசு முன்வரவேண்டும் என, மக்கள் சபை உறுப்பினரான டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் கோரியுள்ளார். அவர் கோரிக்கையை நாம் முழுமனதுடன் ஆதரிக்கின்றோம்,

புத்த மதத்தைச் சார்ந்தவர்களையும் இந்துக்களாகப் பாவித்து நடந்து கொள்ள வேண்டும் என்பதே அரசியல் உணர்வாக அமைந்திருக்கிறது. அவ்வுணர்வை பிரதிபலிக்கும் வகையிலேயே, அதுபற்றிய அரசியல் சட்ட வாசகமும் அமைந்திருக்கின்றது.

அரசியல் சட்ட உணர்வையும், வாசகத்தையும் மதித்து நடக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர் காங்கிரசு ஆளவந்தார்கள். எனவே, அரசியல் சட்ட உணர்வுக்கும் வாசகத்திற்கும் நேர்முரணாக உள்ள அத்திருத்தச் சட்டத்தை உடனடியாகத் திருத்தி அமைக்க காங்கிரசு ஆளவந்தார்கள் முன்வர வேண்டும். அதுதான் நியாயம்.

நியாயமானதைச் செய்ய மனமில்லாது, இந்து மதத்தை விட்டு வெளியேறிவிட்டனர் என்ற ஆத்திரத்தில், புத்த மார்க்கத்தைத் தழுவிக்கொண்ட ஷெட்யூல் வகுப்பினருக்கு அரசாங்கச் சலுகை அளிக்க மறுப்பதில் பிடிவாதமாக காங்கிரசு ஆளவந்தார்கள் இனியும் இருப்பார்களானால், அது அவர்களுடைய இந்துமத வெறியையும், புத்த மார்க்க வெறுப்பையும் வெளிப்படுத்துவதாகவே அமையும் என்பதில் ஐயமில்லை. காங்கிரசு ஆளவந்தார்களின் பிடிவாதம் கண்டு, இது நியாயந்தானா எனக் கேட்பதுடன் புத்த மார்க்கம் தழுவியுள்ள ஷெட்யூல் வகுப்பினர் இருந்துவிடமாட்டார்கள் என்றே நம்புகிறோம்.

தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைத் துடைத்துக் கொள்ளவும், நியாயம் பெறவும் நீதிமன்றம் ஏறவேண்டிய நிலை ஏற்பட்டாலும், அவர்கள் மனமுடைந்து பின்வாங்கிவிடக் கூடாது என்பதே நமது விருப்பமும் வேண்டுகோளும் ஆகும்.

‘பம்பாய் மராட்டியருக்கே சொந்தம்’

மகாகுசராத் தலைவர் கண்ணியமுடன் நியாயத்தை ஒப்புகிறார்

ராஜ்கோட், ஜுன் 25—

பம்பாய் மராட்டியருக்குத்தான் சேர வேண்டும் என்ற நியாயத்தை, மகாகுசராத் ஜனதா பரிஷத் தலைவரான இந்துலால் யக்னிக் அவர்கள் மிகக் கண்ணியமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

கூட்டம் ஒன்றில் பம்பாயின் எதிர்காலம் பற்றிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது அவர், ‘பம்பாய், மராட்டியருக்குத்தான் சேர வேண்டும் என்பது எனது சொந்தக் கருத்து’ என்று குறிப்பிட்டிருக்கிறார்.

“மகாகுசராத் அமைக்க வேண்டும் என்பதே பரிஷத்தின் ஒரே நோக்கம்; ஆகையால், பம்பாய் நகரம் அத்தகையதோர் மாநிலத்தில் சேர்க்கப்பட வேண்டும் எனக் கேட்க முடியாது.

“பரிஷத் ஊழியர்களிடை பம்பாயின் எதிர்காலம் பற்றி கருத்து வேறுபாடு இருக்கிறது. ஆனாலும், ஊழியர்களில் பெரும்பாலானோர், ‘மகாகுசராத் மாநிலம் அமைந்தால்போதுமானது; பம்பாயின் எதிர்காலம் பற்றிக் கவலை இல்லை’ என்றே கருதுகின்றனர்.

“சிலர், மூன்று மாநிலம் வேண்டும் எனக் கேட்கின்றனர்; வேறு சிலர், ‘பம்பாய் மராட்டியருக்கே சொந்தம்’ என்று வாதிடுகின்றனர்.

“பரிஷத்திற்கு, பம்பாய் நகரில் கிளை எதும் கிடையாது; பம்பாய் நகரில் உள்ள குசராத்தியரும், இந்த விவகாரம் குறித்து கருத்து எதும் அளிக்க வில்லை”

என்றும் யக்னிக் குறிப்பிட்டிருக்கிறார்.

“அடுத்து நடைபெறப்போகும் வட்டமேசை மாநாடு ஒன்றில், சம்பந்தப்பட்ட அனைவரும்கூடி இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணுவர்; இப்போதுள்ள சூழ்நிலைக்கு, சில தீவிர கருத்துக்கள் கொடுக்காமலிருந்தால், வரும் அக்டோபருக்குள் இதற்கு ஒரு சுமூகமான முடிவு காணுவது சாத்தியமே” என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இந்து — சீக்கியர் ஒற்றுமை

பாடுபட தாராசிங் விருப்பம்

அமிர்தசரஸ், ஜுன் 25—

இந்துக்களுக்கும்—சீக்கியருக்குமிடையே ஒற்றுமை உருவாக்குவதற்கு தனது வாழ்நாளின் எஞ்சிய பகுதியைச் செலவிடப் போவதாக சீக்கியரின் அகாலி தளத் தலைவர் மாஸ்டர் தாராசிங் தெரிவித்திருக்கிறார்.

தனது 73-வது பிறந்த தினத்தை ஒட்டி, அமிர்தசரஸ் நகர மக்கள் தந்த பாராட்டு விழாவின்போது அவர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

70,603 பேர்!

சளிக் காய்ச்சலுக்கு சிகிச்சை பெற வந்ததாகத் தகவல்

சென்னை, ஜுன் 27—

சளிக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு, 70,603 பேர், ஜூலை 23-ந் தேதி வரையில் நகர மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறவந்தனர் என்றும், இவர்களில் 18-பேர் நோயின் கடுமைக்குப் பலியாயினர் என்றும், சென்னை நகர சபை உறுப்பினர்களுக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

சென்னையின் பழைய சட்டசபைக் கட்டிடம்

இந்தியப் பேரரசின் செய்தி இலாகாவுக்குத் தரப்படுமா?

சென்னை, ஜுன் 27—

சென்னை—மவுண்ட்ரோடு அரசாங்க மாளிகையிலுள்ள பழைய சட்டசபைக் கட்டிடத்தை இந்தியப் பேரரசின் செய்தி இலாகாவுக்குத் தருமாறு மத்திய அமைச்சர் பி. வி. கேஸ்கர், காமராசரைக் கேட்டிருக்கிறாராம்.

கலாச்சாரக் கண்காட்சிகள் நடத்தவும், நாடக அரங்காகவும் அதனைப் பயன்படுத்துமாறு சென்னை சர்க்காரிடம் முன்னரே பல யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்திய சர்க்கார் ஏற்படுத்திய பாகுபாடு

சட்டப் பிரச்சினைகளை ஆராய சென்னை சர்க்கார் முடிவு

சென்னை, ஜுன் 27—

‘மிகப் பின்தங்கிய வகுப்பு’களைச் சேர்ந்த மாணவர்களுக்கு, தொழில் கல்லூரிகளில் இடங்கள் ஒதுக்குவதற்கான யோசனை சென்னை அமைச்சரவையினால் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. இது பற்றிய சட்டப் பிரச்சினைகள் முழு அளவில் பரிசீலனை செய்யப்படவேண்டுமென அமைச்சரவை முடிவு செய்ததாம்.

‘மிகப் பின்தங்கிய’ என்ற பாகுபாடு, இந்திய சர்க்கார் ஏற்படுத்தியதாகும். முடிதிருத்தும் தொழிலாளர், சலவைத் தொழிலாளர் போன்றவர்கள் இப்பாகுபாடின்கீழ் வருகின்றனர்.

சாகுபடி செலவுகளுக்குக் கடன் தர முயற்சி

சென்னை சர்க்கார் உத்தேசம்

சென்னை, ஜுன் 27—

1957-ம் ஆண்டில், சாகுபடி செலவுகளுக்காக விவசாயிகளுக்குக் கடன் தருவதற்காக, சென்னை சர்க்கார், ரூ. 11 கோடி ஒதுக்கியிருப்பதாகத் தெரிய வருகிறது.

இவ்வருடத்தில், 150 பெரிய சங்கங்களும், 200 சிறிய சங்கங்களும் துவக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிறதாம். ‘விவசாய் பாங்கி’கள் என்று மக்கள் இதனை கூறுகின்றனர்.

உருக்கு, சிமெண்டு அளவை அதிகரிக்க சென்னை சர்க்காரின் கோரிக்கை

வழக்கம்போல டில்லி கைவிரிக்கிறது

சென்னை, ஜுன் 26—

சென்னை சர்க்கார், தங்களுக்கு சிமெண்டு, மற்றும் உருக்கு ‘கோட்டா’வை அதிகரித்துத்தர வேண்டும் என்று எவ்வளவோ வற்புறுத்திக்கேட்டும் டில்லி சர்க்கார், அதிகம் தரமுடியாதெனக் கூறி விட்டார்களாம்!

இந்த ஏமாற்றம் சென்னை சர்க்காருக்கு பெரும் கவலையைத் தந்துள்ளதாம்!

இந்த நிலைதான் 1959-ம் ஆண்டுவரை—அதாவது, நிறுவப்பட்டுவரும் புதிய இரும்பு—உருக்குத் தொழிற்சாலைகள் உற்பத்தி துவங்கும் வரை நீடிக்கும் என்றும் கூறப்படுகிறது.

விதிக்கப்பட்டுள்ளபடி சென்னைக்கு, ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் திங்கள்களில், சர்க்கார் அபிவிருத்தித் திட்டங்களுக்காக 600 டன்; உருக்குச் சாமான் தொழிற்சாலைகளுக்காக 812 டன்; விவசாயமில்லாத காரியங்களுக்காக 1,320 டன் உருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்த மூன்று மாதங்களிலுமாக சென்னைக்கு மாதந்தோறும் 26,000 டன் சிமெண்டுதான் தரப்படுமாம்.

இந்த அளவு, தனது அபிவிருத்தித் திட்டங்களுக்கும் இதர வேலைகளுக்கும் போதுமானதல்ல என்று கூறி, ‘கோட்டா’வை அதிகரித்துத் தருமாறு டில்லி சர்க்காரை சென்னை அரசாங்கம் கேட்டிருந்ததாம்! இந்தக் கோரிக்கையை ஏற்க டில்லி, வழக்கம் போல மறுத்துவிட்டதாம்!

ரூ. 2 கோடி குறையுமெனஎதிர்பார்க்கிறார்களாம்!

இந்திய சர்க்கார் மேற்கொண்டுள்ள சிக்கன நடவடிக்கைகளின் காரணமாக, சர்க்கார் செலவு ரூ 2 கோடி குறையுமென எதிர்பார்க்கப்படுகிறதாம்! ஊதிய குறைப்புகள் இதில் சேர வில்லையாம்!

பரவாத இடங்களில் எல்லாம் கழக இலட்சியம் வேகமாகப் பரவுகிறது

சேலம் சிறப்புக் கூட்டத்தில் மு. கருணாநிதி பெருமிதம்

சேலம், ஜுன் 27—

23—5—57 அன்று சேலம் பாரத் டாக்கீசில் தோழர் ஏ. மாரியப்பன் எம்.சி. தலைமையில் நடைபெற்ற தி. மு. கழக சிறப்புக் கூட்டத்தில் தோழர் மு. கருணாநிதி எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"சென்ற பொதுத் தேர்தலில் தி. மு. கழக அபேட்சகர்கள் 120 பேர் போட்டியிட்டதில் 15 பேர் வெற்றி பெற்றதைப் பற்றி நமக்கு சிறிது அதிருப்தி இருந்தாலும், மாற்றுக் கட்சியினருக்கோ அதனால் அதிர்ச்சியே ஏற்பட்டுள்ளது. இந்தத் தொகுதியில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வெற்றி பெறாததைக் கண்டு நாங்கள் மிக்க வருத்தமடைந்தோம்.

"தேர்தலின்போது தி. மு. கழகம்தான் நாகரிக முறையிலும் சனநாயக முறையிலும் தேர்தல் வேலை செய்ததாக வடநாட்டுப் பத்திரிகைகள் எழுதியுள்ளன. அந்த அளவுக்கு சிறந்த முறையில் தி. மு. கழகம் தேர்தல் வேலைகளை செய்ததுதான்.

"காங்கிரசில் எப்படி கறையான்கள் புகுந்துவிட்டன என்பது பற்றி அகில இந்தியக் காங்கிரஸ் கூட்டத்தில் நேரு பேசி இருக்கிறார். அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தேபரோ, காங்கிரஸ்காரர்களுக்கு, எவ்வாறு காங்கிரஸ் மதிப்பை இழந்துவருகிறது என்பது பற்றியும், குறிப்பாக கேரளத்தில் கம்யூனிஸ்டு மந்திரிசபை அமைத்தது குறித்தும், நம்மைப் பற்றி—நாட்டைத் துண்டு போட வேண்டும் என்று கூறும் கட்சிக்கு (தி. மு. கழகத்திற்கு) 17 இலட்சம் வாக்குகள் கிடைத்திருக்கின்றனவே என்றும் இரகசிய சுற்றறிக்கையில் கூறியிருக்கிறார். தி. மு. கழகம் அடைந்த வெற்றியைக் கண்டு தேபர் மிகவும் அதிர்ச்சியடைந்திருக்கிறார் என்பது தெரிகிறது.

"காங்கிரஸ் கட்சிக்கு சென்ற தேர்தலில் சுமார் 50 இலட்சம் வாக்குகளே கிடைத்தன; காங்கிரசை எதிர்த்த கட்சிகளுக்கு மொத்தம் 61 இலட்சம் வாக்குகள் கிடைத்தன. 11 இலட்சம் வாக்குகள் அதிகமாக கிடைத்தபோதிலும், எதிர்க்கட்சிகளுக்குள் ஒற்றுமை இல்லாத காரணத்தால் காங்கிரஸ் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்ற முடிந்தது.

"காங்கிரசுக்கு அடுத்தபடியாக தி. மு. கழகம்தான் அதிக வாக்குகள் வாங்கி இருக்கின்றன.

"காங்கிரசுக்கு அடுத்த எதிர்க்கட்சி தி. மு. கழகம் என்பது நன்கு தெளிவாகிறது.

"தி. மு. கழகம் தேர்தலில் 15 இடங்களைப் பெற்றதானது, இல்லாத ஒன்றை தி. மு. கழகம் அடைந்தது; காங்கிரசோ—இந்தத் தேர்தலில், இழந்ததைப் பெற்றது; கம்யூனிஸ்டோ—இருந்ததை இந்தத் தேர்தலில் இழந்தது.

"ரஷ்யா போன்ற மேனாடுகளில், இறந்தவர்கள், அவர்களது சொத்துக்கள் முதலியன யாருக்குச் சேரவேண்டும் என்பது பற்றி சொல்வதற்காக தற்காலிகமாக விஞ்ஞான முறையில் ஒரு மணி நேரம உயிர் பிழைக்க வைக்கிறார்களாம்! ஒரு மணி நேரம் கழித்து அவர்கள் மீண்டும் இறந்துவிடுவார்களாம்! அதேபோல்தான் காங்கிரசும், இந்தத் தேர்தலில் தற்காலிகமாக இழந்ததைப் பெற்றுள்ளது. ஆகவே, இந்த 5 ஆண்டுகளில்தான் காங்கிரஸ் தற்காலிகமாக ஆட்சியில் இருக்கும். மீண்டும் அடுத்த தேர்தலில் காங்கிரஸ் நிச்சயமாகப் படுதோல்வி அடையும்.

"கடந்த ஒரு வார காலத்தில் 7 புதிய தி. மு. கழகக் கிளைகளை நான் திறந்து வைத்தேன். எங்கெங்கு நம் கழகக் கொள்கைகள் பரவமுடியாது என்று இருந்ததோ அங்கெல்லாம் நமது கழகக் கொள்கைகள் தீவிரமாகப் பரவிவருகின்றன. தேர்தலுக்குப் பிறகு ஏராளமான கிளைக் கழகங்கள் நாட்டில் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

"நேரு தமிழர்களைப் பார்த்து 'நான் சென்ஸ்' என்று சொன்னபோது அதை எதிர்த்து தி. மு. கழகம் இரயில் கிறுத்தப் போராட்டம் நடத்தியபொழுதும், கல்லக்குடி போராட்டம் நடத்தியபொழுதும், ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்து அவருடைய வீட்டுக்கு முன் தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் மறியல் நடத்தியபொழுதும், 'திராவிட நாடு கிடைத்துவிடுமா?' என்று கிண்டல் செய்தார்கள். அதேபோல் இப்பொழுது, தி. மு. கழகம் சட்டசபைக்குச் சென்றதைப் பார்த்து, 'திராவிட நாடு கிடைத்துவிடுமா?' என்று கேட்கிறார்கள்.

"இரு காதலர்கள் ஒருவருக்கொருவர் கண்ணோடு கண்ணினை நோக்கின் குழந்தை பிறந்துவிடுமா என்றும், கடல் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு காதலர்கள் தங்கள் கால்களை ஆட்டிக் கொண்டிருப்பதைக் கண்டு குழந்தை பிறந்துவிடுமா என்றும், காதலர்கள் இருவரும் திருமணம் செய்துகொள்ளப் போவதாக திருமணப் பத்திரிகை அச்சடித்து அனுப்பியதைக் கண்டு, 'திருமணப் பத்திரிகை அச்சடித்து அனுப்பியதாலேயே குழந்தை பிறந்துவிடுமா?' என்றும், மணவறைக்குக் காதலர்கள் வந்த காட்சியைக் கண்டு, 'மணவறைக்கு வந்ததாலேயே காதலர்களுக்குக் குழந்தை பிறந்துவிடுமா?' என்றும் ஒருவர் கேட்டால் எப்படி இருக்குமோ, அப்படி இருக்கின்றது, தி. மு. கழகச் செயல்கள் ஒவ்வொன்றையும் கண்டு, 'திராவிட நாடு கிடைத்துவிடுமா?' என்று கேட்பது!

"இந்த 5 ஆண்டுகளுக்கு தங்களை யாரும் அசைக்கமுடியாது என்ற அகம்பாவ எண்ணம் கொண்டு இந்தியப் பேரரசு நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி 112 புதிய வரிகளைப் போட்டுள்ளார். '5 ஆண்டு திட்டத்தை நிறைவேற்ற இந்தப் புதிய வரிப் பணம் செலவழிக்கப்படும்' என்று காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்கள். சர்க்கரைக்கு வரி போட்டதற்கு, மக்கள் அதிகமாக சர்க்கரை சாப்பிட்டால் சர்க்கரை வியாதி ஏற்படும்' என்று காமராசர் சமாதானம்கூறுகிறார்; கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிக்கக்கூட அவ்வளவு கஷ்டப்பட்டிருக்கமாட்டார் போலிருக்கிறது! 'அதிகமாக சர்க்கரை சாப்பிட்டால் நீர்வியாதி வரும்' என்பதைக் கண்டுபிடிக்க காமராசர் அவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார்! அதிக சர்க்கரை உபயோகிக்கக் கூடாதென்று கூறும் காமராசர், திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் பல நெல் வயல்களில், நெல்லுக்குப் பதில் கரும்புகளைப் பயிரிட அனுமதிப்பதேன்?

"வரி இல்லாமல் ஆட்சி நடத்த முடியாதுதான். மக்களைப் பிழிந்து வாட்டும் அளவுக்கு வரி விதிக்காமல், மக்கள் கொடுக்கக் கூடிய அளவுக்கு வரி விதிக்கும் படிதான் கூறுகிறோம்.

"புதிய வரிகள் மூலம் அதிகமாகக் கிடைப்பது ரூ. 75 கோடி; இதில் ரூ. 50 கோடி, ஏற்கெனவேயே அதிகமாக செலவழிக்கப்படும் இராணுவத்திற்கு மேலும் செலவழிக்கப் பயன்படுத்தப்படுமாம். இராணுவச் செலவை மேலும் மேலும் பெருக்கிக் கொண்டு செல்வதேன்?

"1947-லிருந்து இந்த நாட்டின் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபொழுதெல்லாம் ஒவ்வொரு ஆண்டிலும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழுந்துகொண்டே இருக்கிறது. சேமிப்பு நிதியையும் ஆட்சியாளர்கள் கரைத்துவிட்டார்கள்.

"கராச்சி காங்கிரசில், 'யாருக்கும் ரூ. 500-க்குமேல் சம்பளம் இருக்கக்கூடாது' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதே! இப்பொழுது சென்னை மந்திரிகள் ரூ. 1,500 சம்பளம் வாங்குவது ஏன்? காமராசருக்கும் ரூ. 1,500 சம்பளம் தேவையா? கேரள சர்க்காரில் உள்ள மந்திரிகள் ரூ. 500 சம்பளம் வாங்கவில்லையா? சென்னை மந்திரிகளுக்குமட்டும் கேரள மந்திரிகளைவிட 3 வாய், 3 வயிறா, ரூ. 1,500 சம்பளம் வாங்க? இது தவிர, சென்னை மந்திரிகள் சென்னையைவிட்டு வெளியில் பிரயாணம் கிளம்பினால் ஒரு நாளைக்கு ரூ. 250 பிரயாணப்படி வாங்குகிறார்கள். காரில் செல்லும் இவர்களுக்கு பெட்ரோலுக்காக ஒரு நாளைக்கு ரூ 100 செலவாவதாக வைத்துக்கொண்டாலும், மீதி ரூ. 150 வேண்டுமா ஒரு நாளைய சாப்பாட்டிற்கு? போலீஸ்காரர்கள் வெளியூர்களுக்குச் சென்றால் ஒரு நாளைக்கு 12 அணாதானே பிரயாணப்படியாகக் கொடுக்கப்படுகிறது. போலீஸ்காரர்களும் மனிதர்கள்தானே! ஏன், அவர்களுக்கு அதிகமாகப் பிரயாணப்படி கொடுக்கக்கூடாது?

"இந்தியாவிற்கு 13 கவர்னர்கள் இருக்கிறார்கள். தமிழ் நாட்டு கவர்னருக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ. 10 இலட்சம் செலவிடப்படுகிறது. ஆண்டுதோறும் சட்டசபைகளில் அறிக்கையை வாசிப்பதும், பாட்டுக் கச்சேரிகளுக்கும் செல்வதுதானே கவர்னர் வேலை! வேறு என்ன உருப்படியாகக் கவர்னர், வேலை செய்கிறார்? தமிழ் நாட்டிற்குக் கவர்னர் தேவை இல்லை. தமிழ் நாட்டிற்குக் கவர்னர் இல்லாமல் இருந்தால் கவர்னருக்காகச் செலவழிக்கப்படும் பணத்தை வேறு காரியங்களுக்கு செலவழிக்கலாமே! சென்னை மந்திரிகளும் தங்கள் சம்பளங்களையும், பிரயாணப்படிச் செலவையும் குறைத்துக்கொள்ள வேண்டும்."

இறுதியாக சேலம் நகர தி. மு. கழகச் செயலாளர் இ. ஆர். கிருஷ்ணன் நன்றி கூறினர்.

(ந. - நி.)

பெரம்பூர் தொகுதி மக்களுக்கு அறிவிப்பு

பெரம்பூர் தொகுதியிலுள்ள மக்கள் என்னைச் சந்திக்க வேண்டுமாயின் கீழ்க்கண்ட முகவரியில் தினமும் மாலை 6 மணியிலிருந்து 8 மணி வரை சந்திக்கும்படி அறிவித்துக் கொள்ளுகிறேன்.

சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ.
தி. மு. கழக பணிமனை
17, மாணிக்க செட்டித் தெரு
தூனை, சென்னை-7

கல்கத்தா துறைமுகத்தில் புதிய நெருக்கடி

ஏற்றுமதி இறக்குமதியில் தாமதம்

கல்கத்தா துறைமுகத்தில் கப்பல்களில் ஏற்றுமதி—இறக்குமதி செய்யத் தேவைப்படும் அளவிற்குத் தொழிலாளிகள் கிடைக்கவில்லையாம்! இந்தச் சூழ்நிலையைப் பயன் படுத்திக் கொண்டு வேலை செய்ய கிழ்வகுப்புத் தொழிலாளர்களும் முன்வரவில்லையாம்! இதனால் கல்கத்தா துறைமுகத்தில் ஓர் புதிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

சாதாரணமாக கல்கத்தா துறைமுகத்தில் 50 முதல் 60 கப்பல்களே அதிகப்படியாக இருக்கும்; ஆனால் இப்போது 82 கப்பல்கள் துறைமுகத்தில் உள்ளதாம். 26 கப்பல்கள் 'பெர்த்' பகுதியில் இடமில்லாத காரணத்தினால் துறைமுகத்திற்கு வெளியே நிறுத்தப்பட்டுள்ளதாம்;

இந்தக் கப்பல்கள், இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குத் தேவைப்படும் கனரக இயந்திரங்கள், இரும்பு—எஃகு ஆகியவைகளைவற்றை ஏற்றிக் கொண்டு வந்துள்ளனவாம்.

சூயஸ்கால்வாய் பகுதியில் ஏற்பட்ட சிக்கல் தீர்க்கப்பட்டு, கப்பல் போக்குவரத்திற்குக் கால்வாய் திறக்கப்பட்டதும் அதிக அளவில் கப்பல்கள் கல்கத்தா துறைமுகத்தை நோக்கி வந்துவிட்டதாகக் காரணம் கூறப்பட்டுள்ளது.

இந்தச்சாதகமான சூழ்நிலையை அறிந்து ஏற்றுமதி—இறக்குமதி தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், தங்களுக்குத்தரப்படும் கூலியை உயர்த்த வேண்டும் என்று கேட்டுவந்ததை வலியுறுத்த முற்பட்டுவிட்டனர் என்று தெரிய வருகிறது.

இப்போது ஒரு கீழ்த்தர தொழிலாளிக்கு, ஒரு 'ஷிப்டு'க்கு ரூ. 2 கூலியும், இரவில் 4 அணா 'படி'யும், 3 டன்களுக்கு அதிகமாக ஏற்றுமதியோ, இறக்குமதியோ செய்தால் மேலும் 4 அணா 'படி'யும் தரப்படுகிறதாம். மேலும் இவர்களின் ஊதியத்தை மாற்றியமைப்பதற்கு மத்திய அரசாங்கம் குழு ஒன்றை அமைத்துள்ளதாம்.

ஏற்படும் தாமதத்தின் காரணமாக துறைமுகத்தின் நற்பெயர் கெடுகிறது என்பதைத் தொழிலாளருக்கு எடுத்துரைத்தும் பயன் எதுவும் ஏற்படவில்லையாம்!

தற்காலிகமாக வேலை செய்ய தொழிலாளர் முன்வராத சூழ்நிலை வேறு ஏற்பட்டுள்ளதாம்!

வேலை செய்பவர்கள், அதிக வேலை செய்து அதிக ஊதியம் பெற விரும்புவதற்கு மாருக, தங்கள் கூலியை இரண்டு மடங்காகப் பெற, உள்ள வேலையை இரண்டு 'ஷிப்டு'களில் செய்ய முற்படுகின்றனராம்! இந்தப் போக்கின் விளைவாக ஒரு முறைக்கு 60 முதல் 70 டன் சரக்குகளைக் கையாண்ட தொழிலாளர்கள், இப்போது 25 முதல் 30 டன் சரக்குகளை மட்டுமே கையாண்டு வருகின்றனராம்!

க. அன்பழகன்

சென்னை மாநில தந்தி ஊழியர்கள் (4-ம் பிரிவு) சங்கத் தலைவரானார்

700 உறுப்பினர்கள் கொண்ட சென்னை மாநில 4-வது பிரிவு தந்திசிப்பந்திகள் துணைத் தலைவர் திரு. பி. ஆர். ராஜன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அகில இந்திய தபால்—தந்தி தொழிலாளர்கள் சங்கம் விடுத்த அறிக்கையின்படி வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என்பதற்கு ஒத்துழைப்பும், ஆதரவும் தந்தார்கள். மேலும் தோழர் க. அன்பழகன் எம். ஏ; எம். எல். ஏ. அவர்களை சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

முடிவில் மாநில செயலாளர் திரு. எச். ஆர். எம்டி. ராம்ஜீ அவர்கள் வேலை நிறுத்தத்திற்கு ஒத்துழைப்பும், ஆதரவும் தருமாறு கேட்டுக் கொண்டார்.

85 தனி இரயில்கள்

மாஸ்கோ வாலிபர் விழாவிற்காக விடப்படுமாம்!

மாஸ்கோ, ஜுன் 25—

அடுத்த மாதம் மாஸ்கோவில் நடைபெறும் இளைஞர் திருவிழாவின்போது, அதில் கலந்து கொள்ளும் ஆயிரக்கணக்கான வெளிநாட்டவரின் வசதிக்காக, ரஷ்யப் போக்குவரத்து அதிகாரிகள் 1,112 பெட்டிகள் கொண்ட 85 விசேட இரயில்களை விடுவதற்கு ஏற்பாடுகள் செய்திருப்பதாக 'டாஸ்' கூறுகிறது.

விவசாய வருமான முறைக்கு சென்னை மறுப்பு!

சென்னை, ஜுன் 26—

இப்போதுள்ள நிலவரி முறையை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு தெரிவித்த சிபாரிசுகளை சென்னை அமைச்சரவை ஏற்க மறுத்துள்ளது.

விவசாய வருமான முறையைக் கொண்டு வருவதைப் பற்றிய சிபாரிசுகள் பரிசீலிக்கப்பட்டன என்றும், அதை அமுலுக்குக் கொண்டு வருவது சாத்தியமில்லை என்றும் அமைச்சரவை தீர்மானித்துள்ளதாம்.

தேங்காய் குழு சிபாரிசு நிராகரிப்பு

'தகுந்த நேரம் இது அல்ல' என்கிறது இந்தியப் பேரரசு

தேங்காய் எண்ணெய்க்குக் குறைந்தபட்ச விலையை நிர்ணயிப்பதற்குதக்க நேரம் இது அல்ல என்று சர்க்கார் கருதுவதால், மத்திய தேங்காய் குழு கூறிய யோசனையை இந்திய சர்க்கார் நிராகரித்துவிட்டிருக்கின்றனர்.

ஏழை மாணவர்களுக்கு இலவச உணவளிப்பு

இலுப்பூர் தி. மு. கழக உதவி

இலுப்பூர், ஜுன் 24—

10—6—57-ல், இலுப்பூரில் திருச்சி மாவட்ட ஆட்சி மன்ற உயர்நிலை துவக்கப் பள்ளியில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு இலவசப் பகல் உணவு அளிப்பதற்கு, மாவட்ட ஆட்சி மன்ற உறுப்பினர் தோழர் ஆர். பாலகிருட்டின (நாயுடு) தலைமையில் நடைபெற்ற ஊர் மக்கள் கூட்டத்தில் 15 பேர் கொண்ட ஓர் குழு அமைக்கப்பட்டது.

அக்குழுவிற்கு தோழர் ஆர். பாலகிருட்டின (நாயுடு) தலைவராகவும், இலுப்பூர் தி. மு. கழகச் செயலாளர் தோழர் எல். எஸ். எல். இலட்சுமணன் துணைத் தலைவராகவும், இப்பள்ளி தலைமை ஆசிரியர் எச். இராமமூர்த்தி, சீனிவாசன் ஆகியோர் செயலாளர்களாகவும், செயற்குழு உறுப்பினர்களில் ஒருவராக கழகத் தோழர் கி. இலட்சுமணன் அவர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டது. இக்குழுவே உணவளிப்பு விதியை துவக்குவதென்றும், துவக்க விழாவை மாநிலக் கல்வித்துறை இயக்குநர் அவர்களைக் கொண்டு நடத்துவதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த இலவச உணவு அளிப்புக்கு, இலுப்பூர் தி. மு. கழகச் சார்பில் திங்கள் ஒன்றுக்கு ரூ. 10 நன்கொடையாகத் தருவதென்று இலுப்பூர் தி. மு. கழகக் கிளை தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

திருத்தம்

24—6—57 (சென்னை) இதழ் 3-ம் பக்கத்தில் 'என். வி. நடராசன் சுற்றுப் பயண நிகழ்ச்சிகள்' என்ற தலைப்பில் 'காவேரிப் பட்டணம்' நிகழ்ச்சியில், 'வள்ளுவர் படிப்பகம்' எனக் குறிப்பிடப் பட்டிருப்பதை 'வள்ளுவர் நூல் நிலயம்' என திருத்திப் படித்துக் கொள்ளக் கோருகிறோம்.

(ஆ-ர்.)

கழகக் கூட்டங்கள்

★

சென்னை 14-வதுவட்டம்:
அண்ணா பிள்ளை தெருவில்
(கொத்தவால்சாவடி அருகில்)
30—6—57 மாலை 6 மணிக்கு
தலைவர் :
கே. எஸ். இலட்சுமணன்
பேசுவோர் :
கண்ணதாசன்
எஸ். எஸ். தென்னரசு
கோ. செங்குட்டுவன்
கா. இரகுநாதன்

★

சிறுகளப்பூர் :
(திருச்சி மாவட்டம்)
சோழன் திடல்
30—6—57 மாலை 5 மணிக்கு
தலைவர் : எஸ். ஆர். முத்துசாமி
பேசுவோர் :
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.
அன்பில்-தருமலிங்கம்
குஞ்சிதபாதம்

★

காவேரிப்பட்டணம் :
காந்தி திடலில்
1—7—57 மாலை 6 மணிக்கு
தலைவர் :
கே. வி. பரமசிவம்
பேசுவோர் :
என். எஸ். இளங்கோ

★

கட்டிமேடு :
ஜின்னா விளையாட்டு மைதானம்
30—6—57 மாலை 6 மணிக்கு
தலைவர் :
எஸ். எம். எச். கமாலுதீன்
பேசுவோர் :
சி. பி சிற்றரசு
ந. தருமலிங்கம்
முக. மீரா

★

அணைக்குடம் :
மாரியம்மன் கோவில் எதிரில்
30—6—57 மாலை 5 மணிக்கு
தலைவர் : என். காசிநாதன்
பேசுவோர் :
தில்லை-வில்லாளன்
சா. இராமசாமி
ம. கோ. மணி

திருவாரூர் நகர பொதுஉறுப்பினர்களுக்கு:

" திருவாரூர் நகர தி. மு. கழகச் செயலாளர் பதவி விலகலின் காரணமாக, காலியான செயலாளர் தேர்தல், 30—6—57 ஞாயிறு மாலை 5-மணிக்கு விஜயபுரம் கருணாநிதி அச்சக மாடியில் தோழர் இரா. விஜயராகவன் தலைமையில் நடைபெறும், பொது உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுகிறேன் "

என தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அறிவிக்கிறார்.

சேலம் நகர தி. மு. கழகப் பொது உறுப்பினர்களுக்கு:

30—6—57 காலை 10 மணிக்கு, சேலம் நகர தி. மு. கழகக் கட்டிடத்தில் மாவட்டச் செயலாளர் திரு. ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில், நகர தி. மு. கழகத்தில் தற்போது காலியாக உள்ள செயற்குழு 6 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும். எல்லாப் பொது உறுப்பினர்களும் கலந்துகொள்ள வேண்டப்படுகிறார்கள்.

அல்ஜீரியாவுக்கு பிரெஞ்சு படை விரைகிறது

பாரீஸ், ஜூன் 25—

டுனீஷியாவிலிருந்து அல்ஜீரியாவுக்கு கலகக்காரர்கள் வந்துவிடாமல் தடுக்க டுனீஷியாவிலிருந்து 27,000 துருப்புகள் கொண்ட ஒரு இராணுவப் பிரிவை அனுப்புவதென பிரெஞ்சு அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

கேரளப் பிரதேச தி. மு. கழகம்

பொதுச்செயலாளர்
இரா. நெடுஞ்செழியன்
துவக்கி வைப்பார்

30—6—57 ஞாயிறன்று தி. மு. கழக கேரள மாநிலக் கிளை துவக்கவிழா பாலக்காடில் நடைபெறும்; பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மேற்படி கிளையைத் துவக்கி வைப்பார்.

பிற நிகழ்ச்சிகள்

அன்று காலை 8 மணிமுதல் 11 மணிவரை, பாலக்காடு தி. மு. கழக அலுவலகத்தில் பிரதிநிதிகள் கூட்டமும், 11 மணிக்கு மேல் மாபெரும் ஊர்வலமும், 12 மணிக்கு கோட்டை மைதானத்தில் தோழர் டி. வி. நாராயணசாமி அவர்களால் கொடியேற்றுவிழாவும், பிற்பகல் 2 மணிமுதல் 4 மணிவரை பிரதிநிதிகள் கூட்டமும் நடைபெறும்.

பொதுக்கூட்டம்

அன்று மாலை 5-மணிக்கு ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும்; பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தோழர்கள் நாஞ்சில் கி. மனோகரன், டி. வி. நாராயணசாமி, கே. எச். எம். சுபேர், கலைபழகன், இராமநாதன் ஆகியோரும் கொள்கை விளக்க உரை ஆற்றுவர்.

சென்னை-சூளை மக்கள் முன்னேற்ற மன்றம் 2-ம் ஆண்டு விழா

29—6—57 மாலை 5 மணிக்கு சூளை, 30 அருணாசல பண்டாரம் தெருவில் மேற்படி ஆண்டு விழா தோழர் ஆர். ஜார்ஜ் தலைமையில் நடைபெறும்; அதுபோது தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ., தோழர்கள் ஏ வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

ஆம்பூர் திருவள்ளுவர் கழகம் 8-ம் ஆண்டுவிழா

30—6—57 மாலை 6-மணிக்கு ஆம்பூர் வாரச் சந்தை மைதானத்தில், நகராண்மைக் கழகத் தலைவர் எம். நடேசன் அவர்கள் தலைமையில் மேற்படி ஆண்டுவிழா நடைபெறும்; அதுபோது திரு. கா. அப்பாதுரையார், திருக்குறள் வி. முனுசாமி ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

பொதுக்கூட்டம்

30—6—57 மாலை 6 மணிக்கு குடியேற்றம்—பிச்சனூர் பகுத்தறிவு இளைஞர் மன்றச் சார்பில், கங்காதர சுவாமி மடாலயத் தெரு சந்திப்பில், தோழர் ஏ. இராமகிருட்டினன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்; அதுபோது தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் என். எஸ். இளங்கோ அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

29—6—57 இரவு 9 மணிக்கு திருப்பூர், 16—17-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், வள்ளுவர் படிப்பகத்தில், 'வாழும் வடநாடு—தேயும் தென்னாடு' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

29—6—57 மாலை 6 மணிக்கு சென்னை—சூளை ஊ. பு. அ. சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பக மனையில், தோழர் இரா. பாலராசு தலைமையில், 'இன்றைய சமுதாயப் பணியில் திராவிட முன்னேற்றக் கழகம்' என்பது பற்றித் தோழர்கள் பலர் பேசுவர்; இரவு 9 மணிக்கு படிப்பக செயற்குழுக் கூட்டம் தோழர் டி. கே. இளங்கோ தலைமையில் நடைபெறும்; வரவு-செலவு கணக்குகள், இதரப் பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

டி. பிரகாசம் மறைவுக்கு சட்டசபை அனுதாபம் :

தி. மு. கழகச் சார்பில் அன்பழகன் அனுதாபம்

சென்னை, ஜூன் 27—

" 1946—47-ல் சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த திரு. டி. பிரகாசம் அவர்களின் மறைவுக்கு இந்தச் சபை ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது,

என்ற அனுதாபத் தீர்மானத்தை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் இன்று கூடிய சென்னை சட்டசபையில் முன்மொழிந்து, மறைந்த பெரியாரின் நாட்டுப் பற்றையும், தொண்டுள்ளத்தையும் பாராட்டினர்.

தீர்மானத்தை வழிமொழிந்து பேசுகையில் எதிர்க் கட்சித் தலைவர் வி. கே. இராமசாமி, பிரகாசத்தின் கடந்த 35 ஆண்டு சேவைகளைப் பாராட்டினர்.

அடுத்து, சென்னை சட்டசபை தி. மு. கழகத் துணைத் தலைவர் க. அன்பழகன் அவர்கள் தீர்மானத்தின்மீது பேசுகையில் விரிவாகவும், விளக்கமாகவும், மறைந்த ஆந்திரத் தலைவர் பிரகாசம் அவர்களின் அரசியல் வாழ்வைக் குறிப்பிட்டும், அவர் ஆற்றிய நற்பணிகளை விளக்கியும் பேசினர்.

" முதுமை வயதிலும் இளமையுடன் செயலாற்றியவர்; அடிமை விலங்கை அகற்ற சுதந்திரப் போராட்டத்தில் தீவிர பங்கு கொண்டவர்; தென்னாட்டின் பெருமையை நிலைநாட்டியவர்; வ. உ. சிதம்பரம் அவர்களைப் போன்றவர் " என்று புகழ்ந்தார்.

"கட்சியைவிட நாடும், நாட்டு மக்களும் மிக முக்கியம் என்று அவர் கருதினர் என்பதற்கு, காங்கிரஸ் கட்சியின் மூலம் நாட்டுக்கு சேவை செய்ய முடியாது என்று கருதி, அவர் காங்கிரசிலிருந்து வெளியேறியதே போதிய சான்றாகும்" என்று, குறிப்பிட்டார்.

"மற்ற முதலமைச்சர்களுக்கு அவர் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினர். வழக்கறிஞர் நாட்டுப் பற்றுகொண்டு, மக்கள் முன்னேற்றத்திற்கு பொது சேவையில் ஈடுபட வேண்டும் என்பதற்கு இவர் நல்ல வழிகாட்டியாக அமைந்துள்ளார். அவர் எந்தக் காலத்திலும் தென்னாட்டின் பெருமையை விட்டுக்கொடுத்தவரல்ல; இத்தகையவரின் மறைவு தென்னாட்டிற்கு ஈடு செய்ய முடியாத பெரிய நஷ்டமாகும். அவர் மறைவுக்காக நான் என் சார்பாகவும், நான் சார்ந்துள்ள கட்சியின் சார்பாகவும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது பிரிவால் பாதிக்கப்பட்டுள்ள ஆந்திர மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

அடுத்து, தோழர் பழனிச்சாமி அவர்கள் பேசிய பின்னர், சட்டசபைத் தலைவர் தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்ட பின், தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் தங்கள் இடங்களில் மௌனமாக இருந்த பின்னர், சபை பிற்பகல் 2-30 மணி வரையில் தள்ளிவைக்கப்பட்டது.

சென்னை — மணவழகர் மன்றம்

29-6-57 மாலை 6-30 மணிக்கு எண் 2, முருகேச முதலி தெரு, சிவஞானம் பூங்கா அருகில், மேற்படி மன்றச் சார்பில், திரு. கா. அப்பாதுரையார் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்; அதுபோது, தோழர்கள் பாரியப்பன், அழகுவேலன், ஊ. செயராமன், சி. ஆர். பாலசுந்தரம், மா. சு. சம்பந்தம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை சட்டசபையில் கேள்வி நேரம் :

தமிழ் நாட்டில் தேங்கிக் கிடக்கும் கைத்தறி ஆடைகள்

விற்பனையை ஊக்குவிக்க ஆலைத் துணிகளுக்கு தடைவிதிக்கப்படுமா?

க. அன்பழகன் கேள்விக்கு அமைச்சர் பதில்

சென்னை, ஜூன் 28—

" தேங்கிக் கிடக்கும் கைத்தறி ஆடைகள் விற்பனையை ஊக்குவிக்க, வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஆலைத் துணிகளைத் தடை செய்ய முடியுமா ?"

என்று, சட்டசபையில், தோழர் க. அன்பழகன் அவர்கள் ஒரு கேள்வி எழுப்பினர்.

அமைச்சர் :- " அரசாங்கத்தின் இப்போதைய அரசியல் சட்டத்தின்கீழ் அவ்வாறு செய்ய இயலாது."

★

கைத்தறி ஆடைகளை தோளில் சுமந்து விற்றவர்கள்

உள்நாட்டில் செய்ததுபோல் வெளிநாடுகளிலும் செய்வதற்கு முன்வர வேண்டுமாம்

ஏ. கோவிந்தசாமி கேள்விக்கு அமைச்சரின் பதில்

" தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளை வெளிநாடுகளில் விற்பதற்குப் பிரச்சாரம் செய்வதற்கு சென்னை சட்டசபை உறுப்பினர்களைக் கொண்ட ஒரு 'தூதுக் குழுவை வெளிநாடுகளுக்கு அரசாங்கம் அனுப்புமா ?" என்று உறுப்பினரொருவர் கேட்ட கேள்விக்கு அமைச்சர் வெங்கட்ராமன் பதிலளிக்கையில், 'சட்டசபை உறுப்பினர்களுக்கு அவ்வளவு திறமை இருப்பதாகக் கருதுவதற்கில்லை' என்றார்.

ஏ. கோவிந்தசாமி :- " இந்த சபையில், கைத்தறி ஆடைகளைத் தோள்மீது சுமந்து தெருத் தெருவாகச் சுற்றி விற்பனையை அதிகரிக்கச் செய்து, கைத்தறிக்கு மதிப்பு தேடிய தலைவர்களும், கட்சிப் பிரதிநிதிகளும் உள்ளனர் என்பதை அமைச்சர் அறிவாரா ?"

அமைச்சர் :- " அவர்கள் வெளிநாடுகளிலும், கைத்தறி விற்பனைக்கு உள்நாட்டில் செய்ததுபோல செய்ய முன்வருவார்களானால் கவனிக்கப்படும்."

★

கதரா—கைத்தறியா ?

கேள்வி நிராகரிப்பு

" கைத்தறித் துணிகள் தேங்கியிருப்பதால், அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்படும் உடைகளுக்குக் கைத்தறி துணிகள் பயன்படுத்தப்படுமா ?

என்று தோழர் க. அன்பழகன் கேட்டபோது, 'இப்போதே அந்தமுறை பழக்கத்திலுள்ளது' என்று அமைச்சர் பதிலளித்தார்.

க. அன்பழகன் :— " அரசாங்கம், கதரைக்கூட கைத்தறியாகக் கருதுகிறதா ?"

சட்டசபைத் தலைவர் குறுக்கிட்டு, இக்கேள்வியை நிராகரித்தார்.

★

கைத்தறி மண்டலங்கள் ஏற்படுத்த இயலாதாம் !

விற்பனை பாதிக்கப்படுமாம்

"உணவு சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்டுள்ள மண்டலங்களைப் போன்று கைத்தறிக்கும் மண்டலங்கள் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?" என்று தோழர் க. அன்பழகன் அவர்கள் கேட்டதற்கு, 'கைத்தறி விற்பனை இதனால் பாதிக்கப்படும்' என்று கூறி யோசனையை அமைச்சர் நிராகரித்தார்.

'காலத்திற்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்ளப்படும்'

விசைத்தறி பற்றி அமைச்சர்

"சென்னை அரசாங்க விசைத்தறித் திட்டம் தற்காலிகமானதா, நிரந்தரமானதா ?" என்று, தோழர் க. அன்பழகன் கேட்டதற்கு, அமைச்சர் ஆர். வெங்கட்ராமன்; 'காலத்திற்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்ளப்படும்' என்று பதிலளித்துள்ளார்.

★

பீடித் தொழிலாளர் பாதுகாப்பு மசோதா

எப்போது கொண்டுவரப்படும் என்று கூறுவதற்கில்லையாம் !

பீடித் தொழிலாளர் வேலை நிலைமைகளுக்கான மசோதா பூர்த்தியடைந்துவருவதாகவும், சபையில் எப்போது கொண்டுவரப்படும் என்று இப்போது கூறுவதற்கில்லை என்றும் தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் பதிலளித்தார்.

இந்த சட்டத்தை உருவாக்குவதில் பல சிக்கல்கள் இருப்பதாகவும், தாமதத்திற்கு அதுவே காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

★

சிமெண்டு மண்டலங்கள் ஏற்படுத்தப்படுமா ?

அமைச்சர் கக்கன் பதில்

"சிமெண்டு உபயோகத்திற்கு மண்டலங்கள் ஏற்படுத்தும் நோக்கம் அரசாங்கத்திற்கு உண்டா?"

என்று தோழர் க. அன்பழகன் அவர்கள் கேட்டதற்கு அமைச்சர் கக்கன் பதிலளிக்கையில் 'சிமெண்டு மண்டலங்கள் ஏற்படுத்துவதின் காரணமாக சிமெண்டு எல்லாப் பகுதி மக்களுக்கும் கிடைக்கச் செய்ய இயலாது போகக்கூடும்,' என்று கூறினர்.

சென்னை-சூளை நகர இளைஞர் கழகம்

29—6—57 மாலை 6-மணிக்கு சூளை, எண் 10, மாணிக்க செட்டித் தெரு கழக மனையில், தோழர் பி. பி. சுந்தரராசலு அவர்கள் 'இந்திய நாட்டுத் தொழிற் சங்கமும்—மற்றைய நாடுகளின் தொழிற் சங்கமும்' என்பதுபற்றிப் பேசுவார்.

கூட்டம் ஒத்திவைப்பு

'26—6—57 மாலை, சித்தூர் மாவட்டம்—திருத்தணி வட்டத்திலுள்ள களாம்பாக்கம் கிராமத்தில், நடைபெற இருந்த கூட்டத்திற்கு, தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களும், தோழியர் அலமேலு அப்பாதுரையாரும் சென்னையிலிருந்து வந்துகொண்டிருந்தபொழுது, இடையில் அவர்கள் வந்த கார் பழுதாகிவிட்டதால், குறிப்பிட்டபடி கூட்டத்திற்கு வந்து சேர முடியாததால் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது; அடுத்து கூட்டம் நடத்தவிருக்கும் தேதியை விரைவில் அறிவிக்கிறேன்' என்று மேற்படி கிளையின் செயலாளர் அ. நடராசன் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.